# செந்தமிழ்

தொகுதி : 96 திருவள்ளுவர் ஆண்டு 2033 ஏப்ரல் 2002 பகுதி : 4

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். ஈ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

தொகுதி : 96 திருவள்ளுவர் ஆண்டு 2033 ஏப்ரல் 2002 பகுதி : 4

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

# பொருளடக்கம்


எல்லோருக்கும் தொல்காப்பியம் 115
பேரறிஞர்.நா. பாலுசாமி

தமிழ்மொழியும் உயர்தரக்கல்வியும் 122
வே. முத்துஸாமி ஐயன்

திருவள்ளுவரைத் தெரிந்து கொள்ளுங்கள் 133
நா.பா.

சேக்சுபியரின் சில துன்பியல் நாடகங்களில்
வள்ளுவரின் அறநெறிக் கருத்துக்கள்.
பா. சூரியநாராயணன் 148

# எல்லோருக்கும் தொல்காப்பியம்

*பேரறிஞர்.நா.பாலுசாமி.*

முன்இதழ்த் தொடர்ச்சி

(தொல்-எழுத்து-புணரியல்)

சூத்.113 (உருபு புணர்ச்சி)

*ஐஒடு குஇன் அதுகண் என்னும்*
*அவ்வாறு என்ப வேற்றுமை உருபே*

இச்சூத்திரம் வேற்றுமை உருபுகள் பற்றியதாம். வேற்றுமை உருபுகள் ஐ,ஒடு,கு,இன், அது,கண் என்னும் ஆறுமே ஆகும். அவ்வாறு = அ+ஆறு; அந்த ஆறும் என்பதாம்.

சொல்லதிகாரத்தில் எழுவாயையும் விளியையும் கூட்டி வேற்றுமைகள் எட்டு என்பார் ஆசிரியர். 'ஐ' முதலிய வேற்றுமை உருபுகள் ஆறும் விரிந்தும் மறைந்தும் நின்று பெயர்ப் பொருளைச் செயப்படுபொருள் முதலியனவாக வேறுபாடு செய்து புணர்ச்சி எய்துவிக்கும் என்பது கருதி இங்கு வேற்றுமைகள் ஆறு என்றார். எழுவாய் வேற்றுமைக்கும் விளி வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை.

சூத்-114

*வல்லெழுத்து முதலிய வேற்றுமை உருபிற்கு*
*ஒல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும்.*

(ப.உரை) வல்லெழுத்து முதலிய - வல்லெழுத்துக்களை முதலில் பெற்றிருக்கும், வேற்றுமை உருபிற்கு- வேற்றுமை உருபுகளுக்கு, ஒல்வழி - பொருந்துமிடத்து, ஒற்று - வல்லொற்றோ, மெல்லொற்றோ, இடை மிகுதல் வேண்டும் - இடையில் மிக்குவருதல் வேண்டும்.

உருபு புணர்ச்சியில் வல்லெழுத்துக்களாகிய கு க ஆகியவற்றை முதற்கண் பெற்றிருக்கும் உருபுகள் புணரும்போது நிலைமொழி வருமொழிகளுக்கு இடையில் ஏற்றப்பெற்றி வல்லெழுத்து (அ) மெல்லெழுத்து மிக்கு வரல் வேண்டும்.

(எ.டு) ஊர்+கு = ஊர்க்கு; மணி+கு = மணிக்கு (நான்கன் உருபு)
ஊர்+கண் = ஊர்க்கண்; மணி+கண் = மணிக்கண் (ஏழன் உருபு)
இவ்வாறு வல்லொற்று மிகும். இனி,

தம்+கண் = தங்கண்;

நும்+கண் = நுங்கண்

இவ்வாறு மெல்லெழுத்தும் மிகும். இனி அவன்+கண் = அவன்கண் என இயல்பும் ஆகும் என உணர்க.

நான்காம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையுமே வல்லினமாகிய கு,க என்பவற்றைப் பெற்றவை.

சூத்-115:

*ஆறன் உருபின் அகரக் கிளவி*
*ஈறாகு அகரமுனைக் கெடுதல் வேண்டும்*

(ப-ரை) ஆறன் உருபின் - ஆறாம் வேற்றுமை உருபாகிய 'அது' என்பதன், அகரக்கிளவி - 'அ' என்னும் எழுத்து, ஈறாகு - நிலைமொழியின் ஈற்றில் நிற்கும், அகரமுன் - 'அ' என்பதன்முன், கெடுதல் வேண்டும் - புணரும்போது கெட்டுவரும்.

நிலைமொழியின் ஈற்றில் அகரம் நின்று, வருமொழி முதலில் ஆறாம் வேற்றுமை உருபு 'அது' வந்தால், 'அ' கெட்டுப்புணரும்.

முனை - முன்+ஐ. 'ஐ' சாரியை.

(எ.டு) நம+அது = நமது. 'அது' உருபு 'அ' கெட்டுநின்றது. என+அது = எனது என்பதும் அது.

நம, என- விதியீறாக நின்ற 'அகரம்' என அறிக.

சூத்-116

*வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே*

(பொழிப்பு) புணர்ச்சியிடத்து வேற்றுமை உருபுகள் பெயர்களின் ஈற்றில் நிற்கும்; முன்னர் வாரா. பெயர்வழிய என மாற்றிப் பெயரின் பின்னர் எனப் பொருள் கொள்க.

(எ-டு) சாத்தன்+ஐ = சாத்தனை (இரண்டாம் வேற்றுமை) சாத்தன்+ஒடு = சாத்தனொடு (மூன்றாம் வேற்றுமை) இவ்வாறே

வேற்றுமை உருபுகள் பெயர்களுக்குப் பின்னரே வரும் என அறிக.

சூத்-117.

*உயர்திணைப் பெயரே அஃறிணைப் பெயரென்று*
*ஆயிரண் டென்ப பெயர்நிலைச் சுட்டே*

(ப-ரை) சுட்டு நிலை பெயர் - ஒரு பொருளைக் கருதிச் சுட்டுதற்குக் காரணமான பெயர்களை, உயர்திணைப் பெயர் - உயர்திணைப் பெயர்கள் அஃறிணைப் பெயர் - அஃறிணைப் பெயர்கள், என்று-கூறப்படும், அ இரண்டு என்ப - அவ்விரண்டு வகையே என்பர் அறிஞர்,

உயர்திணைப் பெயர்கள், அஃறிணைப் பெயர்கள் என பெயர்கள் இருவகைப்படும்.

(எ-டு) அவன், அவள், அவர் - உயர்திணைப் பெயர்கள்
அது, அவை - அஃறிணைப்பெயர்கள். ஏகாரம் - அசை. 'அ' நீண்டு 'ஆ' ஆயிற்று.

சூத்-118.

*(சாரியைப் புணர்ச்சி)*
*அவற்றுவழி மருங்கில் சாரியை வருமே*

(ப-ரை) அவற்றுவழி மருங்கில் - அப்பெயர்களின் பின்னர் சாரியைவரும் - சாரியைகள் நிற்கும். வேற்றுமைகள் போன்றே சாரியைகள் பெயர்களுக்குப் பின்னரே வரும். சாரியை - பொருளற்றவை; தனித்து நிற்கா.

(எ-டு) ஆணின் கை, பெண்ணின் கை, பலவற்றுக்கோடு.
இன், கோடு - சாரியைகள்.

சூத்-119

*அவைதாம்*
*இன்னே வற்றே அத்தே அம்மே*
*ஒன்னே ஆனே அக்கே இக்கே*
*அன்னென் கிளவி உளப்படப் பிறவும்*
*அன்ன என்ப சாரியை மொழியே*

(பொழிப்பு) இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக்கு, இக்கு, அன் முதலியன சாரியைகளாம். சாரியை மொழி - சாரியைகளாகிய சொற்கள். எழுத்துச் சாரியை, சொற்சாரியை என சாரியைகள் இருவகைப்படும். 'ஐ' - எழுத்துச்சாரியைக வற்று- சொற்சாரியை. அவைதாம் - அச்சாரியைகளாவன.

சூத்-120

*அவற்றுள்*
*இன்னின் இகரம் ஆவின் இறுதி*
*முன்னர்க் கெடுதல் உரித்தும் ஆகும்*

(பொழிப்பு) சாரியைகளுள் 'இன்' சாரியையது 'இ' என்னும் எழுத்து 'ஆ' என்னும் சொல்லீற்றின்முன் கெடவும் கூடும்; கெடாமலும் நிற்கலாம். ஆ+இன்+ஐ = ஆனை, ஆவினை
ஆ+கோடு = ஆன்கோடு, ஆவின் கோடு
முன்னதில் 'ஐ' விகுதி. ஆனை -'இ' கெட்டது;
ஆவினை - 'இ' கெடாது நின்றது.

சூத்-121

*அளவாகு மொழிமுதல் நிலைஇய உயிர்மிசை*
*னஃகான் றஃகான் ஆகிய நிலைத்தே*

(ப-ரை) அளவாகு மொழிமுதல் - அளவுப்பெயரின் முன், நிலைஇய - நிற்கும், உயிர்மிசை - உயிர் எழுத்தின் மேல் நின்ற, னஃகான்- இன் சாரியையினது னகரம், றஃகான் ஆகிய நிலைத்து - றகரமாகிய நிலையை உடையது.

அளவுப்பெயரின் முன் நிற்கும் உயிரின் மேல்வரும் இன் சாரியையது 'ன','ற' ஆகும் தன்மையது. அஃதாவது 'ன்' - 'ற்' ஆகும்.

(எ-டு) பத்து+இன்+அகல் = பதிற்றகல். பத்து-ஈற்றுஉயிர்மெய் கெட்டு 'பத்' என்று நிற்கும். பின், னகர ஒற்று றகர ஒற்றாகிப் பதிற்று என்றாகும். 'அகல்' புணரும் போது பதிற்றகல் என நிற்கும்.
பதிற்றுழக்கு = பத்து+இன்+உழக்கு என்பது மேற்கூறியவாறே புணரும்.

சூத்-122.

*வஃகான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன்*
*அஃகான் நிற்றல் ஆகிய பண்பே*

(பொழிப்பு) சுட்டெழுத்தினை முதலில் பெற்ற ஐகார ஈற்றுச் சொல் முன், வற்றுச்சாரியை, தன் வகரமாகிய உயிர் மெய் கெட, ஆங்கு ஏறிய அகரம் நிற்கும்.

(எ-டு) அவையற்றை - அவை+வற்று+ஐ - இடையில் வந்த யகர ஒற்று உடம்படுமெய். வற்றுச் சாரியையின் வகர மெய் கெட அவை+ய்+ற்று+ஐ = அவையற்றை என வந்தது. விரிக்குங்கால், அவை+ய்+அ+ற்று+ஐ = அவையற்றை என வரும்.

சூத்-123.

*னஃகான் றஃகான் நான்கன் உருபிற்கு.*

இன், ஒன், ஆன், அன் ஆகிய நான்கினும் உள்ள னகர ஒற்று றகர ஒற்றாகும் நான்காம் வேற்றுமை உருபு வருமிடத்து.

(எ-டு) ஆவிற்கு, விளவிற்கு (ஆ+இன்+கு) - வகரம் உடம்படுமெய்.

சூத்-124.

*ஆனின் னகரமும் அதனோ ரற்றே*
*நாள்முன் வரூஉம் வன்முதல் தொழிற்கே,*

(ப-ரை) நாள் முதல் வரும் - நாள் பெயராக வரும் சொல்லுக்கும், வல் முதல் தொழிற்கு - வல்லெழுத்தை முதலில் கொண்ட வினைச்சொற்கும். இடையில் வரும், ஆனின் னகரமும் - ஆன் சாரியையின் னகர ஒற்றும், அதனோரற்று - மேலே கூறப்பட்ட ஆன் சாரியைப்போல றகர ஒற்றாய்த் திரியும்.

நாள் குறித்த பெயருக்கும் வல்லெழுத்தை முதலில் பெற்றுவரும் வினைச்சொற்கும் இடையே வரும் ஆன் சாரியையினது னகரமும் அந்நான்கன் உருபின்கண் வரும் ஆன் சாரியையோடு ஒத்து றகரமாகும்.

(எ-டு) பரணியாற் கொண்டான், அவிட்டத்தாற் கொண்டான்; னகர ஒற்று றகர ஒற்றாயினவாறு காண்க.

சூத் - 125,

*அத்தின் அகரம் அகரமுனை இல்லை*

அத்துச்சாரியையின் அகரம், அகர ஈற்றுச் சொல்முன் இல்லையாம், கெடும் என்றவாறு,

(எ-டு) மகத்துக்கை - மக+அத்து+கை. அத்துச்சாரியையின் முதல் நின்று அகரம் கெட்டது.

சூத்-126,

*இக்கின் இகரம் இகரமுனை அற்றே*

இக்குச் சாரியையின் இகரம், இகர ஈற்றுச் சொல்முன்னர் முற்கூறிய அத்துப்போலக் கெடும்.

(எ-டு) ஆடிக்குக் கொண்டான் = ஆடி+இக்கு+கொண்டான். 'இகரம்' கெட்டது காண்க.

சூத்-127,

*ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும்*

இக்குச் சாரியையின் இகரம் இகர ஈற்றுச்சொல் முன் கெடுவது போன்று, ஐகார ஈற்றுச் சொல் முன்னரும் கெடும்.

(எ-டு) சித்திரைக்குக் கொண்டான். இக்குச்சாரியையின் இகரம் ஐகாரத்தின் முன்னர்க் கெட்டவாறு காண்க.

சூத் - 128,

*எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி*
*அக்கின் இறுதிமெய் மிசையொடும் கெடுமே*
*குற்றிய லுகரம் முற்றத் தோன்றாது.*

(ப-ரை) எப்பெயர் முன்னரும் - எத்தகைய பெயர்ச்சொல் முன்னும், வல்லெழுத்து வரும் வழி - வல்லெழுத்து வருமிடத்து, அக்கின் இறுதி - அக்கு என்பதன் ஈற்றில் நிற்கும், குற்றியலுகரம் - குற்றியலுகரம், முற்றத்தோன்றாது - முழுதும் மறைந்து, மெய் மிசையொடும் கெடும் - உகரம் ஏறிய மெய்யெழுத்து, அதன் முன்னுள்ள மெய்யொடும் கெடும்.

எப்பெயராயினும் வருமொழியில் வல்லெழுத்து வந்து பொருந்துமாயின், அக்குச்சாரியையின் ஈற்று உயிர்மெய் கெடுவதுடன் அயல் நின்ற மெய்யும் கெடும் என்றவாறு.

(எ-டு) தமிழ்+அக்கு+கூத்து = தமிழக்கூத்து.

குன்றம்+அக்கு+கூகை = குன்றக்கூகை

தமிழ்+அக்கு -க்கு கெட்டு, தமிழ+அ = தமிழ என நிற்கும். 'கூத்து' புணரும்போது ஒற்றுமிக்குத் தமிழக்கூத்து என வந்தது. குன்றம் என்பதற்கும் இவ்வாறே காண்க.

சூத்-129,

*அம்மின் இறுதி கசதக் காலை*
*தன்மெய் திரிந்து ஙஞந ஆகும்*

(பொழிப்பு) அம்மு என்னும் சாரியையினது மகர ஒற்று (ம்) க,ச,த இவை வருமொழி முதலாக வருமிடத்துத் தனது வடிவம் திரிந்து முறையே ங,ஞ,ந என வரும்.

(எ-டு) புளியங்கோடு, புளியஞ்செதிள், புளியந்தோல் என வரும்.

சூத் - 130,

*மென்மையும் இடைமையும் வரூஉம் காலை*
*இன்மை வேண்டும் என்மனார் புலவர்,*

அம்மின்இறுதி மெல்லெழுத்தும் இடை எழுத்தும் வருமிடத்து இறுதி மகரம் இன்றி முடியும் என்பர் ஆசிரியர்.

(எ-டு) புளிய ஞெரி, நுனி, முரி, யாழ், வட்டு என வரும்.

- தொடரும்

# ★ தமிழ்மொழியும் உயர்தரக்கல்வியும்

கூரறிவாலும் குன்றா ஊக்கத்தாலும் பேரும்புகழும் பிறங்கும் ஸபாநாயகரவர்களே! மற்றும் இங்கு விஜயஞ்செய்துள்ள செந்தமிழ்ப் புலமைச்செல்வமும், செந்தமிழ் வண்மைச் செல்வமும், செந்தமிழ்ப்பற்றுச் செல்வமும் படைத்துள்ள பலதரப்பட்ட பண்புடையாளர்களே!

இப்பேரவையிற் சிறியேன் எடுத்துரைக்கப்புகும் விஷயம் தமிழ்மொழியும் உயர்தரக்கல்வியும் என்பது. இவ்வுபந்யாஸத்தில் உயர்தரக்கல்வி இத்தன்மைத்தென்பதும், நம்நாட்டில் அத்தகைக்கல்வியில் தமிழ்மொழி எத்தகைய இடம் பெறல்வேண்டுமென்பதும், அங்ஙனம் இடம் பெறுதற்குரிய இயற்கையாற்றல் அதற்குளதா என்பதும், உளதாயின் அத்தகைய இடம்பெறுதலால் விளையும் பயன் இன்ன ஆகலாம் என்பதும் பிறவும் என்னுடைய புல்லறிவிற்கு எட்டியமட்டில் நல்லறிவாளர் சிலருடைய கருத்தைத்தழுவி இங்கே சற்று விரித்துரைக்க முயல்கின்றேன். இச்சபையிலுள்ள பெரியோர்கள் இவ்வுபந்யாசத் திற்காணப்படும். "குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்ககொளல்" வேண்டும் என்று மிகுந்த பணிவுடன் அவர்களை வேண்டிக்கேட்டுக்கொள்கின்றேன்.

இப்பொழுது நம் தென்னாட்டிலுள்ள உயர்தரக்கல்விச் சாலைகளிலெல்லாம் சென்னை மாகாணத்துரைத்தனத்தாராலும், சென்னை ஸர்வ கலாசங்கத்தாராலும் நடத்தப்பெற்றுவரும் பரீக்ஷைகளைக்கருதியே அங்குள்ள மாணாக்கர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள் என்பதும், இக்கல்விச்சாலைகளில் இவர்களுக்குப் பொதுவாக இலக்கியம், கணிதம், பல வகைப்

---

★ இது மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பதினான்காம் வருஷோத்ஸவக் கூட்டத்தில் மகா-ள-ள-ஸ்ரீ திவான்பகதூர் எல்.டி.சுவாமிக்கண்ணுப்பிள்ளை, எம்.ஏ.,எல்.எல்.பி.,பி.எஸ்.ஸீ., அவர்களுடைய அக்கிராசனத்தின்கீழ் வாசிக்கப்பெற்றது.

பட்ட ப்ரகிருதிசாஸ்திரங்கள், சித்திரம், தேகாப்யாஸம் இவை பெரும்பாலும் கற்பிக்கப்பட்டு வருகின்றன என்பதும், இங்குள்ளார் அனைவரும் அறிந்துள்ளார்கள். இங்ஙனம் பல்வகைப்பட்ட கலைகளிலும். மாணாக்கர்களுக்குப் பழக்கம் செய்வித்தலே இவ்வுபந்யாஸத்தில், உயர்தரக்கல்வியெனச் சுட்டப் பட்டிருக்கிறது. யாதேனும் ஒரே துறையில் மிகச்சிறந்த புலமையெய்தும்படி மாணாக்கர்களைப் பழக்குவதும் அம்மட்டில் உயர்தரக்கல்வியேயாமெனினும் "ஈண்டு உயர்தரக் கல்வியென்னும் தொடர்மொழி இப்பொருளில் எடுத்தாளப் பட்டிலது. இங்கே குறித்தபொருளில் உயர்தரக்கல்வி மேற்கூறியாங்குப் பற்பல பாடசாலைகளிலும் ஊக்கத்துடன் பயிற்றப்பட்டே வருகின்றது. இவ்வுயர்தரக்கல்வியில் தமிழ்க்கல்வி சம்பந்தப்பட்டமட்டிற் கவனிக்கத்தக்க சில விவரங்களை இங்கே எடுத்தியம்புகின்றேன்."

அவைதாம்:-

1. இலக்கியத்தில் தமிழ்ப்பாடம் நீங்கலாக எல்லாக்கலைகளும் இங்கிலீஷ்ப்பாஷை மூலமாகப் பயிற்றப்படுதல்.
2. இத்தமிழிலக்கியத்தானும் மாணாக்கர்கட்கு இன்றியமையாப் பாடமாயிராமல் இஷ்டமானால் எடுத்துக்கொள்ளும் பாடமாக ஏற்பட்டிருத்தல்.
3. பாடஜாப்தாவில் தமிழில் வ்யாஸமெழுதல் மாத்திரமே கட்டாயப் பாடமாயிருத்தல். இதுவும் காலேஜ்களில் ஸம்ஸ்கிருத மொழி பெயர்ப்பை இப்பாடத்திற்கு மாற்றாக மாணாக்கர்கள் அமைத்துக் கொள்ளாதவரையில்.

இவற்றை ஒவ்வொன்றாக மேனோக்காக நோக்குவோருக்கும் நம் தாய்மொழி நம்நாட்டில் நடைபெறும் உயர்தரக்கல்வியில் எவ்வளவு தூரம் புறக்கணிக்கப்பட்டிருக்கிற தென்பது தெள்ளிதிற் புலப்படும்.

இனித் தமிழ்மொழிக்கும், உயர்தரக்கல்விக்கும் எத்தகைய இயைபு இருத்தல் வேண்டுமென்பதைக் கூறுவேன்.

ஆங்கில இலக்கியம் நம் கல்விச்சாலைகளில் முக்யபாடங்களுள் ஒன்றாயிருத்தலும், சிலகாலம்வரை சில சாஸ்திர நூல்கள் ஆங்கிலபாஷை மூலமாகக் கற்பிக்கப் படுதலுந்தவிர, மற்ற எல்லாப் பாடங்களும் உயர்தரக் கல்விபயிலுவோர்க்குத் தமிழ்ப்பாஷை மூலமாகக் கற்பிக்கப்பட வேண்டும். இதுவே நம் தமிழ்நாட்டில் தேஷபாஷை பல்வழியிலும் செழித்து வளர்தற்கும் கல்வியும் நாகரீகமும் மேம்படுதற்கும் நேரியவழியாகும். இவ்விஷயம் பற்பல ஆக்ஷேபணைகளுக் கிடந்தருமென்பதும், இது எளிதில் ஸித்தி பெறத்தக்கதன்று என்பதும் உண்மையே. அவ்வாக்ஷேபங்களின் முக்யாம்சங்களை இங்கு எடுத்தோதி அவற்றிற்கு ஸமாதானங் கூறுவது ஈண்டைக்குப் பொருத்தமுடையதாகும். ஆக்ஷேபங்களில் அதிமுக்கியமானவை இரண்டு. அவையாவன 1. தாய்மொழி வாயிலாகக் கல்விகற்பித்தால், நம்நாட்டார்க்கு ஆங்கில மொழியிற் பாண்டித்யமும், மேனாட்டு நவீன சரித்திர சாஸ்த்ர ஆராய்ச்சிகளால் நம்மவர்க்குண்டாகும் நற்பயனும் குறைவு படுமென்பது. 2. தமிழ்ப்பாஷை பற்பல கலைகளையும் நன்கு விளக்கிப் போதிப்பதற்குத் தகுந்த ஆற்றலிலது என்பது. இவையிரண்டும் பேய்த்தேர் போன்ற போலிக்கூற்றுக்களாமாறு இங்கு விளக்குவேன்.

தமிழ்மொழிவாயிலாக உயர்தரக்கல்வி கற்பிக்கவேண்டு மென்று கூறியதுடன், புறனடையாக, *ஆங்கில இலக்கியமும் சிலகாலம்வரை சில சாஸ்திர நூல்களுந்தவிர.* என்று கூறியுள்ளது கவனிக்கற்பாலது. ஆங்கில பாஷையை நம்கல்விச்சாலைகளிற் கட்டாயப்பாடங்களில் முக்கியமாவதொன்றாய்ச் செய்து. அந்தப்பாடத்தைத் தகுந்தவித்வான்களைக் கொண்டுபோதித்து வந்தால், இயல்பாகவே எவர்க்கும் ராஜபாஷையின் மீதுள்ள மோஹமும், நற்கல்வியின்பயனாக அதன்கண் அமைந்துள்ள நன்னூல்களைக் கற்றுக்கொள்வதிற் படிப்பவர்க்கு இயல்பாய் எழும் தாபமும் நிலைத்திருக்கும் வரை, நம்மாணாக்கர்கட்கு ஆங்கிலத்தில் தேர்ச்சி குறைவுபடும் என்பது கொள்ளத்தக்கதன்று.

இனித் தமிழ்மொழிவாயிலாக உயர்தரக் கல்விபயிற்ற முடியாதென்பது எவ்வளவு பொருத்தமுடையது என்பதைப் பார்ப்போம். இதுவே, ஆங்கிலமுணர்ந்த அறிவாளர்களிற் பெரும்பாலர் ஆழ்ந்துயோசியாமற்கூறும், ஒரு பலத்த ஆஷேபம். இது தமிழ்மொழியின் இயல்பையும் தமிழ் நூல்களின் பெருமையையும் தக்கபடி உணராத தவற்றினாலேயே எழுவது. இயற்கைநலம் இலங்கச் செஞ்சொற்களில் அமைந்துள்ள சங்க நூல்களும் ஒழுக்கமே உயிரினும் ஓம்பத்தகுவது என்று இடித்துரைக்கும் எண்ணில்லாத பல நீதி நூல்களும் பத்திச் சுவைநனிசொட்டச் சொட்டப்பாடப்பெற்ற பாக்கள் நிறைந்துள்ள மதசம்பந்தமான கிரந்தங்களும் கற்பனைநயமும் சொற்பொருணயமும் கலந்து கற்றோர் மனதைக்காமுறுக்கும் காவிய நூல்களும், நம்தமிழில் எத்துணைச்சிறப்பாக அமைந்துள்ளன? பண்டைத்தமிழ் நூல்களிற் பலவற்றைப் பரோபகாரமாக வெளிப்படுத்தியுள்ள பிரஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்யாயர் உ.வே. சாமிநாத ஐயரவர்களும், காலஞ்சென்ற ராவ்பஹதூர் சி.வை.தாமோதரம் பிள்ளையவர்களும், புதுவழியில் தமிழ் நூல்கள் புனைந்து வெளியிட்ட பிரஹ்மஸ்ரீ வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்களும் தங்கள் பதிப்பு நூல்களுக்கெழுதியுள்ள ஆராய்ச்சி முகவுரைகளை நோக்குவோர்க்குத் தமிழ்மொழியினது பொருள் விளக்குமாற்றல் நன்குபுலப்படும். மற்றும் ஆங்கிலமும் தமிழும் வல்லவர்களாய் அருந்தமிழ் நூல்களியற்றிப் பெரும்புகழ் படைத்த மகாராஜராஜஸ்ரீ வேதநாயகம் பிள்ளையவர்களுடைய "ஸர்வஸமயசமரஸ கீர்த்தனை, நீதிநூல், பெண்மதிமாலை, பிரதாபமுதலியார்சரித்ரம்" முதலிய நூல்களையும், ஸ்ரீமான் அ.மாதவையர்B.A., அவர்களும், பண்டிதர் S.C. நடேசசாஸ்திரியாரவர்களும் இயற்றியுள்ள பற்பல தமிழ்நாவல்களையும் படித்துப்பார்த்தால் தமிழ்மொழியில் நவீனக்கருத்துக்கள் நயம்பட இயங்குதல் அங்கையங்கனியென அறியக்கிடக்கின்றது. தமிழ்ப்பாஷையின் இயலமைப்பும் இலக்கண அமைப்பும் வேண்டுழி வேண்டியாங்கு வேண்டிய

புதுச்சொற்கள் சொற்றொடர்கள் முதலியவற்றைத் தமிழ்மொழியிற் பொருள் விளக்கமுற அமைத்துக்கொள்வதற்கு ஏற்றனவாக இருக்கின்றன. இதனோடு ஸமயம்நேரும்போது ஸம்ஸ்கிருதத்தின் நல்லுதவியும் தமிழுக்கு வாய்க்கிறபடியால், தமிழ்மொழியால் நம்மவர்க்கு உயர்தரக்கல்வி பயிற்றமுடியாதென்பது ஒப்புக்கொள்ளத்தக்கதன்று.

புறமாறுதல்கள் ஏற்படும்போதெல்லாம் அதிலும் தமிழ் ஸம்பந்தப்பட்டதென்றால், இவ்வித ஆக்ஷேபங்களைப் புகழ்வது புவிநிறைமாந்தர்க்கு வழக்கமாய்விட்டது. முதன்முதல் சுதேசமித்ரன் பத்திரிகையை நடாத்தத்தொடங்கியபோது, அம்முயற்சி வீணாகுமென்றுகருதி, நமது தென்னாட்டுத் தேசபக்த சிரோமணியாகும் பிரஹ்மஸ்ரீ ஜி.ஸுப்ரமண்யஐயரவர்களுடைய புத்தியின்மைக்கு இரங்கிய புத்திமான்கள் பலர். இப்போது அம்மித்திரன் சற்றுமுன்பின் முப்பதாண்டுகளாகத் தமிழ்நாட்டில் நல்லொளிபரப்பிவிளங்குகிறது பற்றி, அதன் முற்போக்கைப் பின்பற்றி இன்னும்சில தமிழ்ப்பத்திரிகைகளும் இயன்றவரை ஒழுங்காக நடைபெறுகின்றன. இப்பத்திரிகைகளால் ராஜாங்க விஷயமாகவும் சரித்ரசாஸ்திரவிஷயமாகவும் வழக்காறு பெற்ற வார்த்தைகள் பலவன்றோ? அவற்றாற் பல்லாயிரக்கணக்காகுந் தமிழ் மக்கள் பயனடைந்திருக்கின்றனரன்றோ? ஏரோபிளேனுக்கும் (Aeroplane) ஸப்மேரினுக்கும் (Submarine) ஸமீபகாலத்தில் ஒவ்வொன்றற்கும் இவ்விரண்டு தமிழ்மொழிகள் ஆகாயவிமானம், ஆகாயக்கப்பல் என்றும், நீர்முழுகி துளைபடகு என்றும் ஏற்பட்டுள்ளதை உற்றுநோக்கின் "சேணிற்பறக்கின்ற செந்தமிழ்க்குதிரைமுன் திட்டேதுதட்டேது காண்" என்று ஒரு புலவர் கூறியபடி, தமிழ்மொழியினை உயர்தரக்கல்விக்கு உபகாரமாக்குதலைப்பற்றி எதிர்வாதம் பலத்ததாகவேயிருக்கிறது. எனினும் நுண்ணுணர்வோடு தமிழ்மொழியின் வலிமையையும், தற்காலத்தில் அதற்கு அநுகூலமாக ஏற்பட்டுள்ள புறச்சாதனங்களையும் ஆழ்ந்து சிந்திப்போர்க்கு, தமிழ்மொழிவாயிலாக உயர்தரக்கல்வி

பயிற்றுவதில் அந்தப்பாஷையின் இயற்கையமைப்பினால் ஏற்படக்கூடிய விசேஷப்ரதிகூல மொன்றுமில்லை என்பது இதுகாறும் விரித்துக்கூறியவாற்றால் விளக்கப்பட்டது.

ஒருசாரார் நன்றுகூறினீர்; ஏதேதோ ஆகாயக்கோட்டை கட்டுகிறீரே. உயர்தரக்கல்வியைத் தமிழ்மொழியிற்பயிற்றுதற்கு அம்மொழியிற் கணிதம் சரித்ரம் சாஸ்திரம் இவற்றில் தக்கநூல்கள் இல்லையே, இதற்கென்செய்வீர்? என்று கூறுவர். இன்னோர்க்கு யாமுரைக்கற்பாலது யாதெனில், நாம் இவ்விஷயத்தில் எவ்வளவுக்கெவ்வளவு ஊக்கம் செலுத்துகின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு விரைவில் நாம் விரும்பும் புஸ்தகங்கள் வெளிவரும் என்பதே. நமது ஆந்த்ரஸகோதரர்கள் இவ்விஷயத்திற் பேரூக்கங் கொண்டிருக்கிறார்கள் என்பதை நம்மிற்பலர் அறிவோம். அவர்கள் ஆந்த்ரபாஷையின் அபிவிருத்திக்காக ஒன்றுசேர்ந்து முயல்வதன் பயனாக *விஞ்ஞானசந்திரிகாமாலிகை* என்னும் பேரால் வெளிப்படுத்தியுள்ள சரித்ரசாஸ்திர சம்பந்தப்பட்ட பலநூல்கள் மிகச்சிறந்தனவாக வெளிவந்திருப்பதுடன், இவற்றைத் தெலுங்கு நாட்டிலுள்ள கல்விச்சாலைகளிலும் புஸ்தகசாலைகளிலும் வாங்கி வைப்பதையும் ஆசிரியர்களும் மாணாக்கர்களும் அவாவுடன் இந்நூல்களைப்படித்துப் பயனுறுதலையும் யான் கண்கூடாகக் கண்டுள்ளேன். நீரில் இறங்கித்திளைத்தாடினன்றே நீந்துதலிற் பழக்கம் கைவரும். அன்றி நீந்தத் தெரிந்தபின்னரே நீரில் இறங்கவேண்டும் என்று காத்திருப்பதும் இவ்விஷயத்திற் புஸ்தகங்கள் ஏற்படவேண்டுமென்று போக்குச் சொல்லுவதும் ஒரேதன்மையினவாகும்.

ஆதலின் இன்னோரன்ன ஆக்ஷேபங்கள் உண்மையில் ஆதாரமற்றவைகளாய் ஒழிகின்றன.

இனித் தமிழ்மொழி மூலமாகக் கல்விகற்பித்தலால் விளையக்கூடிய நன்மைகளைப்பற்றிச் சற்று ஆராய்வோம்.

அவற்றுள் முதல்தரமான நற்பயன் யாதெனில் மாணாக்கர்கள் புதுவிஷயங்களைத் தாய்ப்பாஷையிற்

கற்றுக்கொண்டால் வேற்றுப்பாஷையிற் கற்றுக்கொள்வதைப் பார்க்கிலும் விரைவாகவும் விளக்கமாகவும் அறிவு முதிர்வார்கள் என்பதே. இப்போது ஸாதாரணமாக ஒருமாணாக்கன் ஆங்கிலபாஷையிலுள்ள ஒருநூலினைத் தானாகவே மெய்ப்பொருளுணர்ந்து படிப்பதற்கு இடமில்லை. இவ்வளவு காலத்திலும் தேஷபாஷைமூலமாக இவர்கள் பலவகைப் பாடங்களைப் படித்துவந்தால் இவர்களுக்கு இவ்விப்பாடங்களில் மிகுந்த தேர்ச்சியுண்டாகுமன்றோ? அங்ஙனமாயின் நம்நாட்டிற் சில்லாண்டுகளே கல்வி பயின்று அரைப்படிப்புடன் படிப்பை நிறுத்திவிடுவோர்கள் தம்மறிவைத் தமிழ் நூல்களால் விருத்தி செய்துகொண்டு தமக்கும் பிறர்க்கும் பயன்படத்தக்க நற்றுறைகளில் தம்வாழ்நாட்களை இனிது கழித்தல் இயலுமன்றோ?

அன்றியும் தேசபாஷையிற் கல்விகற்பிக்கப்படின் நாளடைவில் அதன் நற்பயனாக அரசியலிலும், ஆங்கில அதிகாரிகள் நடாத்தும் தலைமை சான்ற விஷயங்களில் தவிர மற்ற எல்லாவற்றிலும் தேசபாஷை வழங்கப்படுதலும் ஸாத்யமாகும். அப்படியாகுங்கால் இப்போது எடுத்ததெல்லாம் இங்கிலீஷில் நடக்கும் ராஜாங்க நடவடிக்கைகள் தமக்கு ஒன்றுந் தெரியாததனால் நம் ஜனங்கள் அடையும் அயர்வும் மயர்வும். அவைகாரணமாக அவர்கள் நமது காருண்ய கவர் மெண்டாருடைய நன்னோக்கங்களை முழுதும் உணரப் பெறாது பல்லாற்றாலும் தம்மைப் பட்டப்பகலில் ஏமாற்றிப் பணம் பறிக்கும் பற்பல போலியுத்யோகஸ்தர்களுக்குத் தம்பொருளைத் தாமே வீணில் வலியக்கொட்டியளப்பதுமன்றி, அவரைக்காணும் போதெல்லாம் கைகட்டி வாய்புதைத்து மெய்ந்நடுங்கி உறுந்துயரும் படிப்படியாகக் குறைவுபடுமென்பதும் திண்ணம். ஜனங்களும் தங்கள் நிலைமை உரிமை இவற்றை உள்ளபடி உணர்ந்து கொள்வார்கள். இவ்வாறு தாய்மொழியில் உயர்தரக்கல்வி பயிற்றுதலாற் பொதுஜனங்களுக்குப் பற்பல வழியிலும் நன்மையே விளையும் என்பதில் ஐயமில்லை. பற்பல

பகர்வதென்! சரித்ர ஆராய்ச்சிமட்டில் தொன்மைக்காலந்தொட்டு எந்தநாட்டிலும் எக்காலத்திலும், தாய்பாஷை மூலமாகவன்றிச் கல்விச்செல்வம் நிரந்தரப்பெருவாழ்வுற்றதில்லை என்பது அறிஞர்கட்கெல்லாம் ஒப்பமுடிந்ததே.

இதுபற்றியே நம்நாட்டுப்பிரமுகர்களிற் சிலர் இவ்விஷயத்தில் இப்போது ஊக்கம் காட்டிவருகிறார்கள். 3 மாதத்திற்குமுன் இதைப்பற்றித் துரைத்தனத்தார் ஆலோசனை புரியவேண்டுமென்று, ராஜப்ரதிநிதியவர்களுடைய சட்ட நிரூபணசபையில் நமது சென்னைமாகாண ப்ரநிதியாகிய கனம் ராமராயனிங்கார் அவர்களால் வேண்டப்பட்டது. அச்சபையிலுள்ள சில கனவான்கள் அப்போது அதற்கு எதிருரைகூறி அதனை மறுத்தபோதிலும், மற்றுஞ்சிலர் நேருரைகூறி அதன்பயனை விளக்கிக்காட்டினார்கள். இறுதியில் அப்பேரவையிற் கல்வியதிகாரியாகிய கனம் ஸர் ஹார்கோர்ட்பட்லர் அவர்கள் இவ்விஷயம் நிகழும் ஐரோப்பியப் பெரும்போர் முடிவுறும்வரை நிறுத்திவைக்கப்பெறும் என்றும், அதன்பின்னர் இந்தியாவிலுள்ள உள்நாட்டு மாகாண அதிகாரிகளுடைய யோசனை இந்தவிஷயத்தில் விசாரித்தறியப்படுமென்றும் விடையளித்திருக்கின்றார்கள். ஆங்கிலேய ராஜ்யம் அதிவிரைவில் இக்கொடும் போரில் வெற்றி பெற்றுவிளங்கு மென்றும், இப்போது ராஜப்ரதிநிதியாரின் சீரவையிற் கல்வியிலாகாத்தலைமையாகிய அரும்பெறற் பதவிக்கு உயர்த்தப்பட்டிருக்கும் கனம் ஸர்.ஸி.சங்கரனாயர் அவர்கள் இவ்விஷயத்திற் கவனம் செலுத்துவார்கள் என்றும் நாம் ஆவலுற்று எதிர்பார்ப்போமாக.

மற்றும் நமது சென்னை உயர்நீதிஸ்தலத்தில் நீதிபதியாய் விளங்குபவரும் கல்விவிஷயத்தில் மிக்க கவனம் செலுத்துபவரும் ஆகிய கனம் ஜஸ்டிஸ் டி.வி. சேஷகிரிஐயர் அவர்கள் சின்னாட்குமுன் சென்னை ஹிந்துஹைஸ்கூலிற்கூடிய ஒருகூட்டத்தில் தலைமைவகித்தபோது தமது பிரசங்கத்தில்

இக்கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இவர்கள் இக்கருத்தை வெளியிட்டிருப்பதை 20-4-15ல் சென்னைச் சுதேசமித்திரன் பத்திரிகை கீழ்க்குறித்துள்ளபடி பாராட்டித் தலைப்புவியாசம் எழுதியிருக்கிறது.

"தமிழ்ப்பாஷையை அபிவ்ருத்தி செய்ய பி.ஏ.பரீக்ஷைக்குத் தமிழ்ப்பாடங்கள் ஏற்படுவதைக்கூட அவர் (கனம் ஜட்சி அவர்கள்) அவ்வளவு பெரிதாய் நினைக்கவில்லை. இம்மாகாண சக்கண்டரிஸ்கூல்களிற் பாஷைப்பாடங்களல்லாத பாடங்கள் தமிழிலேயே சொல்லி வைக்கப்படுவதற்கு வழியைத்தேட வேண்டுமென்றார்......... கவர்ண்மென்டாரின் அனுமதியை (இவ்விஷயத்தில்) பெற, அவர்களுக்கு...... பொதுஜனங்களும் பெற்றோர்களும் விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டுமென்றார். படித்த இந்தியர்கள் தேசபாஷைகளை விருத்திசெய்ய வேண்டுமென்று சொல்லு வார்களே தவிர அவைகளை இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகும்படி விட்டுவிட வேண்டுமென்று சொல்ல மாட்டார்கள். ஆனால் அவர்கள் தேசபாஷைகளை விருத்திசெய்ய வேண்டுமென்று சொல்லுகிறபடியே விருத்தி செய்து காட்டுவார்களோ என்றால், தாங்களே முன்னுக்கு வந்து விருத்திசெய்துகாட்டப் பலருக்குச் சௌகரியங்கள் இருப்பதுமில்லை, சமயங்கள் வாய்ப்பதுமில்லை. தன்னல மறுப்புக்காட்டி வேலைசெய்யக்கூடிய சிலருக்கே சௌகரியங்களிருக்கும், சமயமும் வாய்க்கும். அப்படிப் பட்டவர்கள் முன்னுக்குவந்து வேலை செய்யத் தலைப் படுவார்களானால் அக்கரைமட்டுமிருக்கச் சௌகரியங்களில் லாதவர்களும், சமயங்கள் வாயாதவர்களும் அவர்களுக்கு உற்ற பின்பலமாக நிற்பார்கள்."

மற்றும் நம்நாட்டிற் பல்லாற்றாலும் முன்னாட்டத் தக்கவர்களாகிய கனம் ஸர் குருதாஸ்பானர்ஜி, ஜஸ்டிஸ் அஷுடோஷ்முக்கர்ஜி, ஸர் எஸ்.ஸுப்ரமண்ய ஐயர், ஸர் பி.எஸ்.

சிவசுவாமி ஐயர், ஸ்ரீமதி அனிபெஸண்ட் அம்மையார் முதலிய பெரியோர்களும் இந்த நோக்கத்தில் ஒருவாறு ஒற்றுமைப்பட்ட உள்ளக்கருத்துடையவர்களாகக் கொள்ளத்தடையில்லை. மேலும், சிறிதுகாலமாக நம்நாட்டில் பல உயர்தரப் பத்திரிகைகளும் இவ்விஷயத்தைப் பரிசீலனைசெய்துவருகின்றன. நானறிந்த வரையில், கல்கத்தா மாடர்ன் ரிவ்யூ, சென்னை எட்யுகேஷன் ரிவ்யூ, மதுரைச் செந்தமிழ், சென்னைச் சுதேசமித்திரன் இப்பத்திரிகைகளில் இவ்விஷயத்திற்கு அனுகூலமாக நிருப நேயர்கள் விஷயம் எழுதி விரித்துள்ள வியாசங்கள் வெளிப் போந்துள்ளன.

இவையெல்லாம் நாம் இப்போது எடுத்துக் கொண்டிருக்கும் நற்கருமத்தின் முற்குறியாகக் கொள்ளற்பாலன. எனினும் கார்யஸித்தி பெறுவது நம்முடைய விடா முயற்சியையும் ஊக்கத்தையும் பொறுத்திருக்கிறது. இம்முறையை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதில் தொடக்கத்தில் எத்துணையோ இடையூறுகளும் இன்னல்களும் ஏற்படத்தான் செய்யும். இம்முறையை எவ்வாறு படிப்படியாக அநுஷ்டானத்துக்குக் கொண்டுவருவது என்னும் விஷயந்தானே ஒரு உபந்யாசத்துக்கிடந்தரத்தக்கதாகலின் அதனை விரிவஞ்சி இங்கே விளக்காது விடுக்கின்றேன். ப்ரஸ்தாபவிஷயத்தை அநுஷ்டானமுறையாகச்செய்வது அஸாத்யமில்லையென்பது பிறிதோரிடத்து இவ்வியாஸத்தில் வற்புறுத்திக் கூறப்பெற்றுள்ளது. இவ்வேற்பாட்டை அநுபவமுறையாக்கும் நன்முயற்சிக்கு ஏற்படக்கூடிய தடைகளையும், அவையிற்றைத்தடுக்கும் வழிகளையும் பற்றி நம்நாட்டுப் பேரறிவாளர்கள் இடைவிடாது துரைத்தனத்தார்க்கு யோசனைகூறவேண்டும். இப்படி நாம் பற்பலவழிகளிலும் பாடுபடவேண்டும். தொடக்கத்தில் இம்முயற்சியாற் பலமுறை பயனுறாதுபோயினும் மீண்டும் மீண்டும் உழைப்பதே நம்கடன். உறுபயன் விழைதல்பற்றிக் கவலையடையவேண்டா என்னும் பகவத்கீதையின் உபதேசத்திற்கிணங்க நம்மவர்களில் அறியாதார்க்கும் நம்மை

அன்புடன் ஆட்சிபுரியும் ஆங்கில அரசாட்சியாளர்க்கும் இவ்விஷயத்தைப்பற்றி எப்போதும் எடுத்துரைப்பதே நம் கடமையாகக் கொள்ளவேண்டும். அப்படி நாம் உழைத்து வந்தால், தம்மோடு சிறிதும் ஸம்பந்தம்பெறாத காட்டுமுரட்டு ஜாதியடிமைகளாகிய நீகிரேவர்களை, அவர்களுடைய யஜமானர்களுக்குக் கோடிக்கணக்காகச் செம்பொன் விலைப் பணம் செலுத்திப்பெற்று, தொழும்பர்களுக்கு முழுச்சுதந்தரத் தையும் அன்புடன் அளித்தருளின நமது ஆங்கில ராஜாங்கத்தார் தம்ராஜ்யத்திற் சிறப்புற்ற பாகமாகத்திகழும் நம்மிந்தியாவின் கல்வியபிவிருத்தியின் பொருட்டு நமக்கு நாள்நாளும் நன்மை தரத்தக்க இவ்வேற்பாட்டினைச் செய்துதவப் பின்வாங்கு வார்களா? ஒருபோதும் மாட்டார்கள். பிரஜைகளிடத்துப் பேரன்பும் கூரறிவுமுடைய மாட்சிமையோங்குநம் மன்னர்சிகாமணியாகிய ஐந்தாம் ஜார்ஜ் அரசர்பிரான் நமது வித்யாபிவிர்த்தியில் மிக்க அனுதாபங்கொண்டிருக்கிறார் என்பதும் யாமனைவரும் நன்கறிந்ததன்றே. நமது முயற்சிமாத்திரம் சோர்வு படாதிருக்குமேல், இத்துணைப்புறச் சாதனங்களுஞ் சேர்ந்து திருவினையாக்குமென்பது திண்ணம் திண்ணம், மும்முறையுந் திண்ணம். இந்நன்னோக்கம் ஈடேறுமாறு திருவருள்சுரக்க.

சங்கத்திறையவராய்ச் சங்கத்தமிழுகந்து
துங்க அகப்பொருளுந்தோற்றுவித்துப்-பொங்குபுகழ்ப்
பாண்டிவள நாடாள் பரமன்சொக்கேசனைநாம்
வேண்டித்துதிப்போம் விழைந்து.

வே. முத்துஸாமி ஐயன், எம்.ஏ.,எல்.டி.,

குற்றங்கடிதல் – அதிகாரம் 44

ஒரு நாட்டை ஆள்வோர் தம்மிடம் கீழ்வரும் குற்றங்கள் *நிகழாமல் நீக்குதல் வேண்டும்.* இவற்றைக் குற்றங்கள் என்று கருதவும், அவற்றை நீக்கவும் அறிவு வேண்டப்படுகிறது. எனவே, அறிவின் இன்றியமையாமையை முதலில் கூறி, அதன்பின் ஆள்பவரிடம் நிகழாமல் கடியப்படவேண்டிய குற்றங்களை விவரிக்கிறார் திருவள்ளுவர். குற்றங்கள் ஆறாகும். அவை:

1. *காமம்*
2. வெகுளி (சினம்)
3. கடும்பற்றுள்ளம் (பொருளை இறுக்கிப்பிடித்தல்)
4. மானம் (பொய்யான மானம்) பிறரைத் தாழ்த்தவேண்டும் எனக் கருதுதல்
5. உவகை (மோகம், மகிழத்தகாதனவற்றிற்கும் மகிழ்தல்)
6. மதம் (செருக்கு)

மேலே கூறப்பட்ட ஆறு குற்றங்களையும், ஆள்வோர் விழிப்புடன் கடிந்தேயாக வேண்டும் என வற்புறுத்துகிறார் திருவள்ளுவர். கடியாவிட்டால் தனக்கும் தன்னால் ஆளப்படும் நாட்டிற்கும் வரும் கேடுகள் பலவாம்.

*மதமாகிய செருக்கும் (ஆணவம், கருவம்) வெகுளியாகிய* கடும் கோபமும், காமமாகிய சிறுமையும் ஆகிய இக்குற்றங்கள் இல்லாத ஆட்சியாளரால் ஆளப்படும் நாடும் மக்களும் மேம்பாடு அடையலாம். செல்வச்செழிப்பும் உண்டாகும். மதம் என்பது செல்வத்தால் ஏற்படும் ஒருவகை மகிழ்ச்சி. மனையறம் தவறாமல் வாழ்வாங்கு வாழும் ஆட்சியாளர் காமத்திற்கு ஆட்பட வாய்ப்புகள் பலவாதலால், அவர்கள் மிகவும் கட்டுப்பாட்டுடன் ஒழுக்கம் காத்தல் வேண்டும். '*நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே*' என்பதும் அறியத்தகும். (நன்டையாவது நல்ல ஒழுக்கம்) . குற்றங்கள் ஆறனுள்ளும் இம்மூன்றுமே பெரும்பான்மையாக நிகழ

வாய்ப்புள்ளமையால் இவற்றைத் திருவள்ளுவர் முதன்மை கொடுத்து வற்புறுத்தியுள்ளார். நாட்டிற்கும் மக்களுக்கும் பெரும் அவமதிப்பு நேராமல் காத்தல் ஆள்வோரின் தலையாய கடமையாகும். எனவே, ஆள்வோர் தமது தனிப்பட்ட ஒழுக்கத்தைக் காப்பதுடன் பொது ஒழுக்கத்தையும் காத்தல் இன்றியமையாததாம்.

ஆட்சியாளர் நீக்கவேண்டும் குற்றங்களுள் இவறல் அல்லது கடும்பற்றுள்ளமும் ஒன்றாகும். அஃதாவது, அரசு செலவழிக்க வேண்டும் இன்றியமையாச் செலவினங்களுக்கும், செலவு செய்யாமை அல்லது பொருள் கொடாமை. இஃது இறுகல் மனம் எனப்படும். நாட்டின் பாதுகாப்புக்குரிய படைகளுக்கும், படைக்கருவிகளுக்கும் பொருளைக் கொடுத்தேயாக வேண்டும். இத்துறையில் சிக்கனம் கூடாது. மேலும், அடிப்படையான தொழிற்சாலைகள், நீர்த்தேக்கங்கள் முதலாயவற்றிற்கும் நிறையப் பொருள் செலவிடுதல் தவிர்க்க முடியாதது. 'கடன் கொண்டும் செய்வன செய்தல் இனிதே'; என்னும் ஆன்றோர் வாக்கும் மனம் கொள்ளத்தகும். இத்துறைகளில் ஓர் அரசு தாராள மனப்பான்மை காட்டுதல் வேண்டும். நாட்டின் பாதுகாப்பிற்கு நிலையான-உறுதியான-பயிற்சி நுட்பம் வாய்ந்த வீரர்கள் தேவை. இவர்களுக்கு மன அமைதி உண்டாகத்தக்க அளவில் அரசு பொருள் (ஊதியம் முதலியன) கொடுத்தல் இன்றியமையாதது.

. இனி, மானம் என்பது மனிதனுக்கு இருக்க வேண்டும் சிறந்த பண்பாகும். 'மானம் இழந்தபின் வாழாமை முன்னினிதே' என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால் மற்றொரு வகையான மானம் உள்ளது. அது குற்றத்தின்பால்படும். அது மாண்பில்லாத மானம். நீக்க வேண்டும் மானம். அந்தணர், சான்றோர், தவத்தோர், மூதாதையர், பெற்றோர் முதலியோரை வணங்காமை மானம் என்னும் குற்றமாம். அரசனாக இருந்தாலும், ஒப்பற்ற வீட்டுத் தலைவனாக இருந்தாலும் இக்குற்றத்தை அறவே நீக்க வேண்டும். மேலும், முடிக்க இயலாத ஒரு காரியத்தை மேற்கொண்டு, பெருமைக்காக அதனை முடித்தே காட்டுவேன் எனக் கருதிச் செயல்படுதலும் குற்றமாம்.

அன்றியும் நாடாள்வோர் மிக்க உவகையையும் நீக்குதல் வேண்டும். அஃதாவது, மிகுந்த தாட்சண்யம் (கழி கண்ணோட்டம்) கூடாது. ஆட்சியர் இரக்கம் காட்டலாம். ஆனால் அளவுக்கு மீறிய கண்ணோட்டம் காட்டினால் அரசு தவறும் வாய்ப்பு உண்டாம். நீதி குன்றும் குறைகளைப் புறக்கணிக்கும் நிலை ஏற்படும். நடுவுநிலை தவறிச் செயல்பட நேரிடும். எனவே, மேலே கண்ட அறுவகைக் குற்றங்களையும் ஆட்சியாளர் களைய வேண்டும்.

## குற்றங்களை எவ்வாறு நீக்கல் வேண்டும்

இவ்வறுவகைக் குற்றங்களையும் நீக்கும் வழிகள் யாவை? திருவள்ளுவர் வழிகாட்டுகிறார்.

1. பழிக்கு அஞ்சவேண்டும்; தினை அளவு குற்றம் தோன்றினும் பனையளவாகக் கருதி நாணப்படுதல் வேண்டும்.
2. பகைவர் தனக்குக் கேடுபயப்பர் என்பது உறுதி; ஆகவே குற்றம் வாராமல் காக்க வேண்டும்.
3. வருமுன்னர் தற்காத்தல் வேண்டும்; இன்றேல் எரியின் முன் (நெருப்பு) வைத்த வைக்கோல் போல அழிந்துபடுவான்.
4. பிறரிடம் குறை காண்பதற்கு முன்னர் தன்னிடம் அக்குற்றங்கள் உள்ளனவா எனத் தன்னைப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். அவ்வாறானால், ஆள்வோர் அஞ்சவேண்டா.

இவை பொதுவாகக் குற்றங்கள் வாராமல் தடுக்கும் வழிகளாம். இனிச் சிறப்பு வகையால் தடுக்கும் வழிகள் கூறப்படுகின்றன. அவை,

1. பணத்தின்மீது பற்றுள்ளம் கொள்ளாது அதனைக் கொண்டு செய்யவேண்டும்: அரசு காரியங்களை முட்டின்றி முடித்தல்
2. ஆள்பவர் தம்மை வியந்து திரிதல் தகாது. மக்களுக்கு நன்மை பயக்காத செயல்களை மேற்கொள்ளக்கூடாது.
3. நாடாளும் தலைவன் தான் விரும்புவன எவை? என்பதனைப் பிறர் (பகைவர், எதிரிகள்) அறிந்து கொள்ள முடியாத வகையில் அனுபவித்தல் வேண்டும். பகைவர்க்கும் எதிரிகளுக்கும் தெரியும்படி அனுபவித்தால், அதுவழியே பகைவர் புகுந்து அவனுக்கு ஆசைகாட்டி அழித்துவிடுவர். இது மிகவும் இன்றியமையாத பண்பு. தான் ஆசைப்படும் பொருளை வைத்தே தன்னை வீழ்த்திவிடுவர் என்பது அறிந்து எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.

நாடாள்வோர் தம்மிடம் குற்றம் குறைகள் வாராமல் காத்துக் கொள்ளல் வேண்டும். ஏனெனில், அவை காரணமாகப் பகைவர் எளிதில் கேடு சூழ முடியும். பொறுப்பில் உள்ளவர்கள் மிக்க கவனத்துடன் செயலாற்ற வேண்டும். தமக்கு ஏற்படும் கேடுகளுக்குப் பகைவரே காரணம் எனக் கருதுவதைவிடத் தம்மிடம் உள்ள குறைகளை அறிந்து தாமே காத்துக்கொள்வது சாலச்சிறந்தது.

## பெரியாரைத் துணைக்கோடல் - அதிகாரம் 45

குற்றம் கடிதல் என்னும் அதிகாரத்தில் விரித்துரைக் கப்பட்ட ஆறு வகையான குற்றங்களும் தம்மிடம் வாராமல் காத்தல் ஆளுவோரின் பொறுப்பு என்பதனை வற்புறுத்திய வள்ளுவப் பெருந்தகை, ஆட்சி இடையூறின்றி நடைபெறு வதற்குப் பெரியார்தம் துணையையும் நாடிப் பெறுதல் வேண்டும் என்கிறார். பெரியார் யார்? சான்றோர்; அதிகாரப் பற்றற்றோர்; சிந்தனையாளர்; ஆட்சிக்கலை வல்லுநர் போன்றோர். இத்தகைய நன்மக்களின் துணை ஆட்சியாளர்க்கு மிகவும் இன்றியமையாதது. இப்பெரியோரின் துணை கிடைப்பின், நாட்டிற்கும் மக்களுக்கும் ஆள்வோர்க்கும் தீங்கு வாராமல் தடுக்க முடியும்.

### பெரியார் இலக்கணம்

1. வயதில் மூத்தோர்
2. அறநெறி உணர்ந்தோர்
3. அரசியற் கலைநூல் வல்லார்
4. அரசுக்கு வரும் கேட்டினை நீக்க வல்லார்
5. பின்வருவனவற்றை முன்னறிந்து காக்க வல்லார்

மேலே கண்ட பண்புகளை உடைய பெரியோர் சிலராவது ஆட்சியாளரின் அணுக்கர்களாக அமைதல் வேண்டும். இவர்களின் துணை பெரிதும் பயன்தரும். தம்மினும் மூத்தோர் உலகியல் அறிவு உடையவர்களாதலின் அவர்களது தொடர்பு வேண்டும். நூலறிவால் மட்டும் அன்றி நுண்ணுணர் வினாலும் அழிவையும் ஆக்கத்தையும் கூறுபடுத்தி அறிந்துரைக்கும் பெற்றியும் அவர்களிடம் இயல்பாகவே உண்டு.

தூரப்பார்வையாலும், பட்டறிவாலும் அப்பெரி அரசுக்குத் துணைநிற்பின், நலம் பல விளையும். அத்த பெரியோர் தொடர்பினை, நன்கு ஆராய்ந்து, வளர்த் கொள்ளல் வேண்டும். ஒரு நாட்டிற்கு இயற்கையா செயற்கையாலும் கேடுகள் வரக்கூடும். மழைஇல்லாம சூறைக்காற்று, வெள்ளம், நெருப்பு, கடும்பனி முதலியன செயலுக்கு அப்பால் தெய்வ நிகழ்ச்சிகளாக நிகழ்ந்து கே சூழ்பவை. இனி, பகைவர், கள்வர், நண்பர், அலுவலர் முதலி மக்களால் வரும் துன்பங்களும் உள்ளன. இவற்றை எல்லாம் நீக்கவல்லவர்கள் தூரப்பார்வையும், நுண்ணறிவும் படைத்த பெரியோர்கள். இவர்களின் துணை மிகவும் இன்றியமையாதது.

## பெரியாரின் துணையால் வரும் சிறப்புக்கள்

1. அரிய பேறுகளில் எல்லாம் மிகவும் அரிய பேறு பெரியார் துணை
2. ஆற்றல்கள் எல்லாவற்றிலும் வலிய ஆற்றல்
3. பெரியார் ஆட்சியாளர்க்குக் கண்கள் போன்றோர்

செயற்கரிய செயல்களை எளிதில் முடிக்கவல்ல பெரியாரை அவர்கள் விரும்பும் பொருள்களைக் கொடுத்தேனும், அரசர்கள் (ஆட்சியாளர்) தமக்கு உரியவர்களாக அமர்த்திக் கொள்ளல் வேண்டும். ஓர் அரசு அல்லது நல்லாட்சி பெறும் பேறுகள் பலவற்றுள்ளும் மிகச் சிறந்த பேறு (பாக்கியம்) இத்தகைய பெரியாரைத் தம்மவராகக் கொண்டிருத்தலாம். ஓர் அரசு இவ்வுலகத்தில் பல நல்ல பேறுகளைப் (சிறப்புகளை) பெற முடியும். ஆனால் அவற்றுள் எல்லாம் உயர்ந்த சிறப்பு பெரியார் கேண்மையே ஆகும். பெரியார் துணை ஒன்று இருந்தாலே, பிற அரியனவற்றை எல்லாம் மிக எளிதில் பெற்றுவிடலாம்.

அறிவு, ஆட்சித்திறல் முதலிய பலவற்றாலும், தம்மைவிட மிக்க திறமையாளர் காட்டும் வழியில் ஆட்சி புரியின் - செயல்பட்டால் - நடந்தால், ஆட்சியாளருக்கு இருக்கும் எல்லா வல்லமைகளுள்ளும் சிறந்த வலிமையாகும். பொருள், படை, பாதுகாப்பு, அரண் முதலியவற்றால் வரும் வலிமைகளினும்

இப்பெரியாரின் துணையாகிய வலிமை மிகச் சிறந்தது என்பதால் மேற்காட்டிய வலிமைகளாலும் நீக்கமுடியாத தெய்வத்துன்பங்களையும் (இயற்கை வேறுபாட்டால் வருபவை) நீக்கிக் காக்கும் வல்லமை அப்பெரியார்க்கே உண்டு என்பதால் அவர்தம் துணை இன்றியமையாதது.

அமைச்சர் முதலிய அரசு உறுப்புக்கள் பக்க பலமாக ஓர் அரசுக்கு இருப்பினும், எல்லா உறுப்புக்களிலும் சிறந்த உறுப்புக்களாகிய கண்கள் போன்றவர்கள் பெரியோர்களே. கண்ணிற்சிறந்த உறுப்பில்லை ஆதலால் கண்ணான பெரியார் தொடர்பு ஆட்சிக்கு மிக மிகத் தேவை என வலியுறுத்துகிறது திருக்குறள். ஓர் அரசு தனக்குள்ள இயல்பான வல்லமையால் அனைத்தும் செய்ய முடியும் என்றாலும், சில இடையூறுகள் - நெருக்கடிகள் - எதிர்பாரா விளைவுகள் நேரும்போது பெரியார் (ஒவ்வொரு துறையிலும் வல்லுநர்) உதவி கிடைக்குமானால், சாதனைகள் எளிதாகும் என்பதாம்.

மேலும், அறிவு ஒழுக்கங்களால் தகுதி உடைய பெரியார்களைத் தமக்கு இனமாகப் பெற்று ஆட்சி புரிவோனைப் பகைவர் முயன்றாலும் துன்பம் செய்ய முடியாது. வஞ்சித்தல், கூடிய நட்பரசுகளைக் கலைத்தல், வேறு பகைவரைத் தூண்டிவிடல் முதலிய தீய சூழ்ச்சிகள் பெரியாரைச் சூழ வாழும் அரசனை வீழ்த்த முடியாது. பெரியோர் ஆலோசனையும் தனது அறிவும் ஒன்று சேர்ந்தால், அவனை வெல்லும் .சக்தி ஒன்றும் இல்லை என்பதாம்.

பழிபாவச் செயல்களும், நீதி அல்லனவும் நிகழ்ந்தால், ஆள்வோரை அஞ்சாது உரிமையுடன் அணுகி அவற்றைக் களைய வல்ல பெரியோரைத் துணையாகக் கொள்ளும்போது, அரசுக்குக் கேடொன்றும் சூழாது. அறியாமையினாலோ, செருக்கினாலோ அரசு தவறான வழியில் செல்லுமாயின், நெருங்கிச் சென்று இடித்துக் கூறித் திருத்தவல்ல அழுத்தமான அறிவுடையோர் துணை மிகப் பல நன்மைகளை விளைவிக்கும், பகைத்துக் கெடுக்க வல்லார் ஒருவரும் இலர்.

## பெரியார் துணை இன்றேல் விளையும் தீமைகள்

1. கெடுப்பார் இன்றியும் கெடுவான்
2. தாங்கும் துணைவரை இழப்பான்
3. பெரியார் தொடர்பு இன்றேல் அளவிறந்த தீமை ஏற்படலாம்

ஆட்சியில் தவறு நிகழுமானால், அடுத்துச் சென்று ஆட்சியாளரை இடித்துக் கூறி நெறிப்படுத்தும் திறனுடைய பெரியாரை இழந்து நிற்கும் அரசு உட்பகையோ புறப்பகையோ இல்லையானாலும், தானே கவிழும். பாகன் இல்லாத யானை போல நெறி அல்லாத தீயநெறியிற் சென்று, ஆளும் தலைவன் கெடுவது உறுதி. பெரியார் ஒரு பாதுகாப்பு அரண் போன்றோர். ஆட்சித் தலைவன் வெறுத்தாலும், நாட்டின் நலன் கருதி இடித்துத் திருத்துவோர் பெரியோராதலின், அவர்தம் துணை பெரிதும் வேண்டப்படுவதாம்.

வாணிகம் செய்வோர்க்குக் கைப்பணமாகிய முதல் இன்றியமையாதது. அதுபோல, ஆபத்து வரும்போது - கேடு நினைப்போர் எதிர்ப்புத் தோன்றும்போது, சார்பாக நின்று தாங்கும் தூண் போன்றோர் பெரியோர் ஆவர். தூண் இன்றேல் மாடம் சாயும். பெரியோர் துணை இன்றேல் ஆட்சி நிலைகுலையும். ஆட்சி புரிவது எளிதன்று. தனது திறமையை மட்டில் நம்பி நிற்றல் அறிவுடைமை ஆகாது. வணிகர் கிடைக்கும் இலாபத்தைவிட முதல் அழியாமல் நிற்றலை விரும்புமாறு போல, ஆட்சியாளர் தம் வலிமையினும் துணை வலிமையை முதன்மையாகக் கருதுதல் வேண்டும் என்பர் திருவள்ளுவர்.

ஆளும் தலைவன் தான் தனியனாய் இருந்து, ஒரே நேரத்தில் பலரும் பகைவராகும் போது, பெரியார் தொடர்பு இல்லாவிடில், அப்பகைவரை விடப் பல மடங்கு கேடு விளையும். முள்ளைக் கொண்டு முள்ளை எடுத்தல் போல, தமக்குப் பகைவராய் இருக்கும் பலருள் ஓரிருவரைப் பிரித்து, அவர்களைக் கொண்டு பகைவரை அழித்தலும், எல்லோரும் கூடி வந்து தம்மை எதிர்க்கும்போது, அப்பகைவரைப் பிரித்தலும்

ஆகிய பல்வேறு உபாயங்களையும் உத்திகளையும், மேற்கொண்டு அழிக்க வந்தாலும் ஒருவாறு தப்பிப் பிழைத்தலும் கூடும்; ஆனால், பெரியார் துணையைக் கைவிடின் பத்துப்பங்கு கேடு விளைவது உறுதி. இவ்வாறு திருவள்ளுவர் பெரியார் துணையைக் கைவிடுதலால் வரும் தீமைகளை விவரித்துள்ளமை மனம் கொள்ளத்தகும். எனவே, ஆட்சிப் பொறுப்பேற்ற ஒருவன் தான் அரசாங்கத்தின் வலிமையை மாத்திரம் நம்பி இராமல் பெரியார் துணையைத் தனக்குச் சார்பாக எப்போதும் கருதுதல் வேண்டும்.

## சிற்றினம் சேராமை - அதிகாரம் 46

அரசர் அல்லது நாடாளும் தலைவரும் அவரைச் சூழ்ந்து நிற்கும் அமைச்சர் முதலியோரும் சிற்றினம் சேராமை வேண்டும். சிற்றினமாவது குணத்தாலும், செயலாலும் சிறிய மனிதர்கள். நல்லதை நல்லது என்று ஒப்புக்கொள்ளாதோரும், தீயதைத் தீயது என்று கருதாதவர்களும், கண்டதே காட்சி கொண்டதே கோலம் எனத் திரிவோரும், காமவயப்பட்டு அலையும் விடலைகளும், வஞ்சகர்களும், கூத்தர்களாகிய கூத்தாடிகளும் அவர்கள் போன்றவர்களும் சிற்றின மாக்கள் ஆவார்கள். இப்படிப் பட்டவர்களை ஆட்சியாளர் தம்மைச் சுற்றித் திரிபவர்களாக அனுமதித்தல் கூடாது. அவர்களால் அவமானமும், ஒழுக்கக்கேடும் விளையும். எப்போதும் சிரித்து மகிழ்ந்து, துதிபாடும் சில்லரை மனிதர்களைத் தூரத்தில் இருத்த வேண்டும். மக்களின் சார்பாளர்களாக இருந்து நெறி தவறாது ஆட்சி புரிய வேண்டியவர்கள் சிற்றினச் சேர்க்கையை வெறுத்து ஒதுக்க வேண்டும். இன்றேல், பெரியார் துணையும் பயன்படாது.

பெரியோர் எனப்படுவோர் சிற்றினத்தை விரும்பார்; அஞ்சத்தக்கவர் என்று எண்ணி விலகியே நிற்பர். ஆனால் சிறியோர் தம்மை ஒத்த சிறியோரையே விரும்பி அகலாது இணைந்து நிற்பர். ஊதாரித்தனமான சிறியோர் தம் அறிவையும் கலக்கித் துன்பத்தையும் உண்டாக்கும் இயல்பினராதலால், பெரியோர் (ஆள்வோர்) அவர்களை அணுகவொட்டார். இதனால் ஆட்சியாளர் இத்தகைய சிறிய மனிதரைத் தம்பக்கம் வைத்திரார் என்பது கருத்து.

இனி, ஒருவர், குறிப்பாக ஆட்சியாளர் ஏன் சிறுமதியாளரைப் புறக்கணிக்க வேண்டும்.? காரணம் உண்டு. நாம் யாருடன் கூடிப் பழகுகிறோமோ அவர்களின் தாக்கம் அல்லது செல்வாக்கு நம் மீதும் விழும். நல்லவர்களாயின் நன்மை, தீயோராயின் தீமை தானே விளையும்! மழைத் தண்ணீருக்கு நிறம் கிடையாது. அது தூய்மையானது. அம்மழைத் தண்ணீர் விழும் நிலத்தின் நிறத்தைப் பொறுத்துத் தானும் நிறம் வேறுபடும். சிவந்த நிலத்தில் (செவல் நிலம்) விழுந்தால் செந்நிறமும், கரிய நிலத்தில் (கரிசல்) விழுந்தால் கரிய நிறமும் கொள்ளும். இஃது இயல்பு. அவ்வாறே ஆட்சியாளரும் தாம் நெருங்கிப் பழகும் மனிதர்களைப் பொறுத்தே குணவியல்புகளையும் பெறுவர். கெடுமதியாளர் தொடர்பு அரசுக்குக் கேட்டினையே விளைவிக்கும். ஒரு நாடு பிற நாட்டோடு நட்புக் கொள்வதற்கும் இக்கொள்கை பொருந்தும். நிலத்தின் இயல்பால் நீர் மாற்றம் பெறுவது போல, இனத்தின் தன்மையால் ஆட்சியாளரின் மதியும் மாறும் என்பார் திருவள்ளுவர். உரையாசிரியர் பரிமேலழகர், "விசும்பின்கண் தன் தன்மைத்தாய நீர் நிலத்தோடு சேர்ந்த வழி நிறம், சுவை முதலிய பண்புகள் திரிந்தாற்போல, தனி நிலைக்கண் தன் தன்மைத்தாய அறிவு, பிற இனத்தோடு சேர்ந்தவழிக் காட்சி முதலிய தொழில்கள் திரியும்" என விளக்கந் தந்திருப்பதைச் சிந்திக்கவும்.

மேலும், மனிதர்க்குப் பொதுவாக அறிவு என்பது அவர்களின் மனத்தின் தன்மையைப் பொறுத்தே அமையும். தூய மனத்தில் கலக்கமற்ற அறிவு துலங்கும். வஞ்சம் சார்ந்த மனத்தில் அறிவு எவ்வாறு தூய்மையாகும்? ஒரு மனிதனை, இவன் இப்படிப்பட்டவன் என்று உலகம் பேச வேண்டுமானால், அப்பேச்சு அவன் சார்ந்துள்ள இனம் காரணமாக உண்டாகும். மனிதனது இயல்பான அறிவுக்கு இனம் வேண்டா. செயற்கையாகிய விசேட உணர்வு பற்றி நல்லவன் என்றோ, தீயவன் என்றோ நிகழும் சொல்லுக்கு இனமே காரணம் ஆகும்.

*"மனத்தாலாம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தாலாம்*
*இன்னான் எனப்படும் சொல்"*

என்னும் குறட்பாவைச் சிந்திக்கவும்.

இனி, அத்தகைய விசேட உணர்வு ஒருவருக்கு மனத்தில் தோன்றுவது போலக் காட்டும். ஆனால், ஆராய்ந்தால், அவ்வுணர்வு தான் பழகும் இனத்தின்கண்ணேயே உள்ளது என்னும் உண்மை புலப்படும். அறிவு மனத்தில் தோன்றி வெளிப்படும் அளவினதே, அதற்குமேல் அது நிலைபெறுவது தனது சேர்க்கையைப் பொறுத்ததேயாம். எனவே, சிறப்பு அறிவுக்குக் காரணம் இனம் என்பது அறிக. மேலும், மனத்தூய்மையும் (பரிசுத்தம்), செயல்தூய்மையும் ஆகிய இரண்டும் ஒருவருக்கு அவரது இனம் பற்றுக்கோடாகவே வரும் என்பதுதான் உண்மை. எனவே, மனத்தூய்மையும் இனத்தூய்மையால் நிலைபெற்று விளக்கமுறும்.

*நல்லினத்தால் வரும் நன்மைகள்*

1. செய்ய மேற்கொள்ளும் திட்டங்கள் எல்லாம் நன்மை தரும்.
2. எல்லாவகையான புகழையும் தரும்.
3. சிறந்த பாதுகாப்புத் தரும்.
4. மறுமை இன்பத்திற்கும் வலிமை சேர்க்கும்.
5. துணைகள் யாவினும் வலிமையான துணை.

ஒருவருக்கு, குறிப்பாக ஆள்பவருக்கு மனநலம் இன நலம் இரண்டும் வேண்டும். மாசும் மறுவும் அற்ற தூய மனமுடைய பெற்றோர்க்குப் பிறக்கும் பிள்ளைகளும் நல்லவர்களாகவே இருப்பார்கள். விதிவிலக்கைப் பற்றிக் கவலைவேண்டா. அஃதாவது, நல்ல வழித்தோன்றல்கள் (சந்ததிகள்) உண்டாவர். ஆனால், நல்ல சேர்க்கையும் உடைய பெற்றோர்க்குச் சந்ததிகள் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும்; சந்ததி (தலைமுறை) அழியாது, தன் பெயரை நினைவு கூரும்.

மனம்போல வாழ்வு என்பர் ஆன்றோர். மனம் செம்மையாக இருந்தால் நலம் பெருகும். செல்வமும் சேரும். மனத்தூய்மை அறம் எனப்படும்; பிற அறம் செய்ய வேண்டா. ஆனால், தனக்குப் புகழை ஈட்டித்தருவோர் தான் சேர்ந்திருக்கும் இனத்தோரே ஆவர். இனநலம் புகழே அன்றி எல்லா நலன்களையும் தரவல்லது.

ஓர் அரசனுக்குப் படை முதலியன பாதுகாப்பாக அமையினும், அவனைச் சார்ந்துள்ள இனம் மிகப்பெரிய பாதுகாப்பு ஆகும். அன்றியும் மனநலத்தை மேலும் மேலும் வளர்த்து வருவது இனமே. ஒரு வேளை சூழ்நிலை காரணமாக மனநலம் கெடினும், சேர்ந்திருக்கும் நல்லினம் அக்கேட்டினை நீக்கி மீண்டும் நிலைபெறச் செய்யும் ஆற்றல் உடையது. இதுவரை கூறியவற்றால் திருவள்ளுவர் ஓர் ஆட்சியாளன் நல்லவர்களைத் துணைக்கு வைத்துக் கொள்ளும் வகையால் சிற்றினத்தை ஓட்டவிடாமல் தடுக்கலாம் என எதிர்மறை வாய்பாட்டால் விளக்கியுள்ளார். பின்வரும் குறட்பாக்கள் நினைவில் வைக்கத்தகும்:

*"மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்*
*இனந்தூய்மை தூவா வரும்"* *(தூ - பற்றுக்கோடு)*
*"நல்லினத்தின் ஊங்குந் துணையில்லை தீயினத்தின்*
*அல்லற் படுப்பதூஉம் இல்"* *(ஊங்கு - மிக்க)*

## *தெரிந்து செயல்வகை - அதிகாரம் 47*

ஓர் அரசு தான் செயல்படுத்த விரும்பும் செயல்களையும் திட்டங்களையும் நன்கு ஆராய்ந்து திறம்படச் செய்து முடித்தல் வேண்டும். சிற்றினத்தைத் தவிர்த்துப் பெரியாரைத் துணைக்கொண்டு அவர்தம் ஆலோசனையையும் கேட்டறிந்து அரசு செயல் மேற்கொள்ள வேண்டும். ஆட்சியாளர் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கும்போது, அதனை நிறைவேற்ற முதலில் உண்டாகும் செலவினங்களையும், அவ்வாறு செலவு செய்த பின்னர், அதனால் நாட்டுக்கு உண்டாகும் நன்மைகளையும், எதிர்காலத்திலும் எந்த அளவுக்கு அப்பயன்கள் மக்களுக்குக் கிடைக்கும் என்பதனையும் நன்கு ஆலோசித்து எல்லாவகையிலும் சாதகமாக இருந்தால், அச்செயல்களை மேற்கொள்ளல் வேண்டும். எனவே நிகழ்காலத்திலும் வருங்காலத்திலும் பயன்தரும் செயலையே அரசு மேற்கொள்ளல் வேண்டும்.

அரசின் செயல்பாடு எல்லாவகையாலும் இடையூறின்றி இலாபகரமாக முடிய வேண்டின் முதலில்,

1. செய்ய வேண்டிய செயல் தக்க செயலா (நல்லதிட்டமா) என்பதை முடிவு செய்க.
2. அச்செயலை யார் துணைகொண்டு செய்யலாம் என்பதனை ஆராய்க.
3. தானும் ஆழமாகச் சிந்தித்து முடிவு செய்க.

மேலேகூறியவாறு செயல் மேற்கொண்டால், செய்ய முடியாதது ஒன்றும் இல்லை. எளிதில் நிறைவேறும். ஆட்சியாளர் தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட வல்லுநர்களைக் கொண்டு, செய்ய மேற்கொள்ளும் திட்டத்தின் விளைவுகளையும் ஆராய்ந்து நிதானமாகச் செயல்படல் வேண்டும். அவ்வாறு செய்தால் ஆகாதது ஒன்றும் இல்லை. திட்டமிட்டபடியே நிறைவேறும்.

## செய்யத்தகாத செயல்கள்

தனிமனிதன் பின்வரும் இலாபத்தினை நோக்கி, தன் கையில் உள்ள முதலையும் இழக்கும்படியான செயலைச் செய்தல் அறிவுடைமை ஆகாது. இது நாடாளும் தலைவனுக்கும் பொருந்தும். தன் வலிமை, தனக்கு வரும் துணை வலிமை, எதிரியின் வலிமை, அவனுக்கு வரும் துணை வலிமை, இடம், காலம் முதலியன ஆராய்ந்து அறியாது, பிறர் நாட்டில் படையெடுத்துச் சென்று தன்நாடும் இழத்தல் அறிவுடைய அரசு செய்யாதன்றோ?

பெரியாருடனும் தானும் நன்கு ஆலோசித்துத் தெளிவு செய்து கொள்ளாத திட்டங்களைத் தொடங்கார் அறிவுடையோர். ஆலோசிக்காமல் ஒரு செயலைத் தொடங்கி, அது தோல்வியைத் தழுவும்போது உலகினர் நிந்தனை செய்வர். இந்த இழிவு வாராமல் காத்தல் வேண்டும்.

ஆள்பவன் தான் செய்யத்தகுந்தது என முடிவு செய்த பின்னரும், எவ்வாறு செய்தால் இனிது நிறைவேறும் என்னும் வழிமுறைகளையும்(உபாயங்கள்)முன்கூட்டியே தீர்மானித்துக்

கொள்ள வேண்டும். இத்தகைய உபாயங்களை எல்லாம் முன்கூட்டியே எண்ணாது செயலைத் தொடங்கினால், அச்செயல் எதிரிகளால் தடுக்கப்பட்டு - குலைக்கப்பட்டு - முடியாது போகும். ஆதலாலும், அதனால் அரசு துயருறும் ஆதலாலும், அவ்வாறு சிந்தியாமையை இழுக்கு என்பார் திருவள்ளுவர். எனவே, செய்வனவற்றையும் முடிக்கும் உத்திகளை அறிந்தே தொடங்க வேண்டும் என்பதாம்.

*"தெளிவில் அதனைத் தொடங்கார் இளிவென்னும்*
*ஏதப்பாடு அஞ்சு பவர்"*

என்னும் குறட்பா நினைவு கூரத்தகும்.

ஒரு நாடு தனது பகைநாட்டின் மீது வெல்லக்கருதிப் படை கொண்டு சென்றால், செல்வதற்கு முன்னரே வலிமை, காலம், இடம் என்ற இவற்றால் தனக்கும் பகைவர்க்கும் ஏற்படும் நிலைமைகளும், போர் தொடங்கும் விதமும், அதற்கு வரும் இடையூறுகளும், அவற்றை நீக்கும் வழிகளையும், வெற்றிபெறும் உபாயங்களையும், அவ்வெற்றியால் நாட்டிற்கு வரும் பயன்களும் ஆகிய இவற்றை எல்லாம் ஆலோசிக்காமல் அரைகுறையாக - அவசரப்பட்டுச் செயலில் இறங்கினால், பகைவர்க்கு இடம் கொடுத்ததாகும். ஆகவே முழுமையாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால், வறிதே இருந்த பகைவர் விழிப்புற்றுத் தங்களை வலிமைபடுத்திக் கொள்வர் என்பதாம். இதுவரை ஓர் அரசு செய்யக்கூடாத காரியங்களையும், செய்தால் வரும் இழிவுகளையும் திருவள்ளுவர் தெளிவாக்கியுள்ளார்.

மேலும், ஆட்சியாளர் செய்ய நினைக்கும் நல்ல காரியங்களுள், அப்போது செய்ய வேண்டாதவற்றைச் செய்தாலும் கேடுவரும். செய்து முடிக்க வேண்டியவற்றைச் செய்யாது தாமதம் செய்தாலும் கேடே வரும்.

## செய்யத்தகாதன பின்வருமாறு

1. பெரும் முயற்சி செய்தாலும் சிறிய பயனே விளைவது

2. பயன் சிறிதானாலும் சந்தேகமானது
3. செய்தால் பிற்காலத்தில் துன்பம் விளைவிக்கக்கூடியது

## இனிச் செய்யத்தகுவன

1. சிறிய முயற்சியில் பெரும் பயன் தருவது
2. சந்தேகத்திற்கு இடமில்லாதது
3. செய்தபின்னர் நெடுங்காலம் பயன்விளைவிப்பது

செய்யத்தகாதனவற்றைச் செய்தாலும், செய்ய வேண்டியவற்றைச் செய்யாது விடுத்தாலும் இருவகையிலும் அரசுக்கு இழப்பே விளையும் என்பதை ஆட்சியாளர் மனம் கொள்ள வேண்டும்.

*"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க*
*செய்யாமை யானும் கெடும்"*

என்னும் அரிய குறட்பாச் சிந்திக்கத்தக்கதாம்.

## *செயலாற்றத்தக்க உபாயங்கள்*

ஓர் அரசு செய்யத்தக்க காரியத்தை, அதனை முடிக்கும் உபாயம் (சிறந்தவழி) அறிந்து தொடங்கல் வேண்டும். தொடங்கி வைத்த பின்னர் மீண்டும் மறுபரிசீலனை செய்தலைத் தவிர்த்தாக வேண்டும். பின்சிந்திப்பு ஏளனத்திற்குரியதாகும். உபாயங்கள் நால்வகைப்படும். அவை:

1. கொடுத்தல்
2. இனியசொல் கூறல்
3. வேறுபடுத்தல்
4. ஒறுத்தல்

இவை தான, சாம, பேத, தண்டம் எனப்படும். தானம் ஐவகைப்படும். அவை: அரிய பொருள்களைக் கொடுத்தல், தனக்குக் கொடுக்கும் பொருள்களை வாங்க மறுத்தல். கொடுக்க வேண்டியவற்றைக் கொடுத்தல். பிறரிடம் கிடைத்த பொருளைக் கொடுத்தல், தீர்வை வாங்காது விடுதல். இனிச் சாமமும் ஐவகைப்படும். அவையாவன:

வணங்குதல், புகழ்தல், எதிர்கொள்ளல், நட்புக்கூறல், உறவு கூறல். பேதத்தின் வகை மூன்று. அவை: நட்பு ஒழிதல், கூடியவர்களைப் பிரித்தல், வேறு பகையை உண்டாக்குதல். தண்டமும் மூவகைப்படும். அவை, துன்புறுத்தல், பொருளைக் கவர்தல், கொல்லுதல். இங்குக் கூறப்பட்ட உபாயங்கள் எல்லாவற்றையும் முற்ற ஆலோசிக்காமல் காரியம் (போர்) தொடங்கினால், பகைவனால் எளிதில் விலக்கப்பட்டு, முடியாமையாலும், இடையில் நிறுத்துதல் கூடாது ஆகையாலும், அரசுக்குத் துன்பம் விளையும் ஆதலாலும் பலவகைகளிலும் இழிவு ஏற்பட்டுவிடும். எனவேதான் வள்ளுவர்,

*"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்*
*எண்ணுவம் என்பது இழுக்கு"*

*என அழுத்தமாக வலியுறுத்தினார்.*

மேலும், 1. உபாயம் அறிந்து செய்யாத முயற்சி 2. ஒவ்வொருவர் பண்பும் அறியாமல் செயல்படல் 3. இகழத்தக்கனவற்றை மேற்கொள்ளல் ஆகிய இவற்றையும் அரசு தவிர்க்க வேண்டும்.

*"நன்றாற்றல் உள்ளும் தவறுண்டாம் அவரவர்*
*பண்பறிந்து ஆற்றாக் கடை"*

என்னும் அரிய குறள் மறக்க முடியாத மணிக்குறளாகும்.

# *சேக்சுபியரின் சில துன்பியல் நாடகங்களில் வள்ளுவரின் அறநெறிக் கருத்துக்கள்,*

*பா. சூரியநாராயணன்.*

*முன் இதழ்த் தொடர்ச்சி...*

***ரீகனிடம் லீயர் பட்டபாடு :***

இப்பொழுது அவன் கானரிலுடன் ஒப்பிடும்போது, கார்டிலியா செய்த 'குற்றம்' எவ்வளவு மிகமிகச்சிறியது என்று எண்ணி எண்ணி அழுதான். அவனை அழவைக்குமளவிற்குக் கானரில் அதிகாரமுடையவளாயினளே என்று உணர்ந்து வெட்கப்பட்டான். தனது பணியாள் கேயசிடம் ஒரு மடல் கொடுத்து தான் வரும் செய்தியை ரீகனுக்குத் தெரிவித்தான். இதிலும் கானரில் தகப்பனுக்கு முந்திக்கொண்டு, தங்கைக்குத் தகப்பன் ஒரு குணக்கேடனென்றும், அவனையும் அவனுடைய பரிவாரத்தையும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டாமென்றும் கூறி ஒரு மடலெழுதி, அதை முன்பு லீயரிடம் துடுக்காகப் பழகிய பணியாளனிடம் கொடுத்தனுப்பினாள். அவனைக் கேயசு சந்தித்தபோது அவனோடு கானரிலின் பணியாள் சண்டையிட்டான்; இதை அறிந்த ரீகன் கேயசைத் தொழுமரத்தில் மாட்டிவைத்துவிட்டாள். (தொழுமரம் அல்லது Stocks என்பது எவரையும் தண்டித்தற்கு வைக்கப்பட்ட மரச்சட்டம்) எனவே லீயர் அங்குவந்து சேர்ந்தபோது, தனது உயிர்போன்ற பற்றுறுதிமிக்க பணியாள் கேயசு ரீகனால் தொழுமரத்தில் வைக்கப்பட்டிருப்பதைக் காணும்படி ஆயிற்று. இது லீயருக்கு ரீகனால் அடுத்து வர இருக்கும் இடர்ப்பாட்டைக் காட்டும் ஓர் தீ நிமித்தம் ஆயிற்று. முதலில் அவனைப் பார்த்தற்கு மறுத்த ரீகனும் அவளுடைய கணவனும், லீயர் உறுதியாக சீற்றத்துடன் அவர்களைப் பார்த்தற்கு எழவும், கடைசியில் அவர்கள் ஒரு கூட்டமாக அவனைக் காண வந்தனர். அந்தக்கூட்டத்தில் அவனால் வெறுக்கப்பட்ட கானரிலை அவன் கண்டான்! அவளைத் தகப்பனுக்கு எதிராகத் தூண்டிவிடுவதற்கு வந்திருந்தாள்; ரீகன் அவளுடைய கையைப்பற்றிக் கொண்டிருந்தாள். கானரிலை சீற்றத்துடன் நோக்கிய லீயர் தனது வெண்தாடியைப் பார்த்தற்கு அவளுக்கு வெட்கமாக இல்லையா

என்று கேட்டான். ரீகன் அவளுடன் லீயர் சென்று மன்னிப்புக்கேட்டு, தனது காவலருள் பாதிப்பேரை மட்டும் வைத்துக்கொள்ளுமாறும், அவனைவிட சமயோசித அறிவுடைய வர்களுடைய கட்டுப்பாட்டில் இருத்தல் வேண்டுமென்றும் கூறி, 25 மெய்க்காவலரே அவனுக்குப் போதும் என்றனள். லீயர் உணவுக்கும், உடைக்கும் தான் கானரிலுக்குக் கீழ்ப்படிதல் எவ்வளவு மடமை என்றும், தான் ஒருபோதும் கானரிலுடன் திரும்பப்போவதில்லை என்றும், அதைவிட நாடு எதுவும் பெறாமல் பிரஞ்சு அரசனை மணந்துகொண்ட தன் இளைய மகளை அடைந்து ஓய்வூதியம் பெறுதல் நல்லதென்றும், தான் 100 வீரர்களுடன் ரீகனோடு தங்கவிருப்பதாகவும் கூறினான். ரீகன் 25 வீரர்களே அவனுக்குப் போதுமென்றனள்; 50 வீரர்களை வைத்துக்கொள்ள ஒப்புதலளித்த கானரிலுடன் திரும்ப விருப்பம் தெரிவித்தபோது, கானரில் அவனுக்கு 5 வீரர்கள்கூடத் தேவையில்லை என்றும் ரீகனுடைய பணியாளரே அவனைக் கவனித்துக் கொள்வதற்குப் போதுமென்றும் கூறி அவனை ஏற்றுக்கொள்ள மறுத்தனள். இவ்வாறு இரு கொடிய மக்களும் தகப்பனுக்குக் கொடுமை இழைப்பதில் ஒருவரை ஒருவர் விஞ்சி நின்றனர். தனது நன்றி கெட்ட மக்களின் நடத்தைக்கு ஆராய்ந்துபாராமல் நாட்டை அவர்களுக்கு அளித்துவிட்ட பெரிய தவறுதான் காரணம் என்று லீயர் எண்ணி வருந்தவே அவனுடைய அறிவுப்புலன்கள் நிலைகுலைந்தன.

இயற்கைக்கு மாறாக நடந்துகொண்ட தனது கொடிய இரண்டு மக்கள் மீது பழிதீர்த்துக்கொள்ளப்போவதாகவும், உலகத்திற்கு இவர்களை ஒரு பேரச்சந்தரும் எடுத்துக் காட்டுகளாக ஆக்கப்போவதாகவும் சூளுரை செய்தான். தன்னால் செய்ய இயலாததைச் செய்யப்போவதாக அவன் சொல்லிக்கொண்டிருக்கும்போது, இரவு வந்தது; இடிமுழக்கத் துடன் மின்னலும் மழையும் வந்தன. அவனுடைய மக்களோ காவலரை உள்ளே விட மறுத்தனர். நன்றிகெட்ட மக்களோடு தங்கியிருத்தலைவிட, வெளியே வலிய புயற்காற்றைத் தாங்குதல் நல்லது என்று கூறி அவன் தன் உதவியாளரோடு புறப்பட்டான். முரண்டுபிடிப்போருக்கு அவர்களுடைய செயல்களே தக்க

தண்டனை ஆகுமென்று மூத்த இருபெண்களும் சொல்லிக் கொண்டு முதிய தகப்பனை வெளியே விட்டு, கதவைச்சாத்திக் கொண்டு உள்ளே போய்விட்டனர். லீயர் அரசன் நெடுந்தொலைவு மழையிலும் புயலிலும் நடந்து சென்றான். ஒரு புதர்கூடத் தென்படவில்லை. நிலத்தைக்கடலினுள் அமிழ்த்து மாறு புயலுக்கு ஆணைவிடுத்தும் நன்றி கெட்டவனெவனுமே இல்லாமல் உலகத்தை விழுங்கிவிடுமாறு கடலுக்கு ஆணை விடுத்தும் கூவினான். அவனுக்குத் துணையாக அவனுடன் கோமாளிமட்டும் இருந்து, பெண்ணின் ஆணவ உணர்வைத் தடுப்பதற்கு அந்த இரவே துணிவுடன் இருக்கிறதென்று நகைச்சுவையாகப் பேசினான். இந்நிலையில் கேயசு அரசனைக் கண்டுபிடித்து அவனுடன் வந்துசேர்ந்தான். கொடிய புயல் விலங்குகளைக்கூடத் தங்களுடைய இடங்களில் ஒதுங்குமாறு செய்துவிட்டதென்றும், இதன் துன்பத்தை மனிதனால் தாங்க இயலாதென்றும் கேயசு சொன்னான். லீயர் புறத்துன்பத்தைவிட அகத்துன்பம் கொடிது என்று சொன்னான். கேயசு லீயரை ஒரு புதரின் மீதிருந்த ஒரு சிறு குடிலில் தங்குவதற்கு அழைத்துச்சென்றான். அதனுள் முதலில் நுழைந்த கோமாளி வெகுண்டு திரும்பி ஓடிவந்து தான் ஒரு பேயைக்கண்டதாகக் கூறினான். உண்மையில் அவன் கண்டது ஒரு பிச்சைக்கார உன்மத்தன், அவன் பேய்களைப்பற்றிக் கூறிக் கோமாளியை வெருட்டிவிட்டான். உடம்பில் ஒரு கம்பளித்துணியைத்தவிர வேறொன்றும் இல்லாத இவனைக்கண்டதும் லீயர் இவன் தன் உடைமைகளைத் தன் நன்றிகெட்ட மக்களுக்கு வழங்கி விட்டதனால் இந்த இரங்கத்தக்க நிலைக்குத்தள்ளப் பட்டானென்று சொன்னான்.

## கேயசு கார்டிலியாவைப் படையுடன் அழைத்துவந்து லீயரைக் காணச் செய்தல்:

அரசனுடைய பேச்சுக்களிலிருந்து அவனுடைய அறிவுப்புலன்கள் வலுவிழந்துவிட்டன என்று ஐயமற உணர்ந்த கேயசு அவனோடு தங்கியிருந்த சில நன்றி உணர்வுடைய பணியாள்களுடன் விடியலில் டோவர் கோட்டைக்கு அழைத்துச்

சென்று அவர்களுடைய கவனிப்பில் அவனை விட்டுவிட்டுக் கப்பலேறிப் பிரான்சுக்குப் போய் கார்டிலியாவின் அவைக்களஞ் சேர்ந்தான். லீயருக்கு ஏற்பட்ட இரங்கத்தக்க நிலையையும், மூத்தபெண்களுடைய வஞ்சகச் செயல்களையும் அவன் கூறக்கேட்ட கார்டிலியா, கண்ணீர்மல்க இங்கிலாந்து சென்று கொடிய உடன்பிறந்தோரை அடக்குவதற்கு வேண்டும் படை உதவியையும் தரும்படி கணவனிடம் கேட்டுப்பெற்றாள். அவள் டோவரை அடையு முன்னர் லீயர் அங்கிருந்து தப்பி அருகில் வயல்களில் பித்துப்பிடித்த நிலையில் தனக்குத்தானே உரக்கப்பாடியும், வைக்கோலிலும், முள்ளிலும் செய்த ஒரு முடியைத் தலையில் வைத்துக்கொண்டும் திரிந்துகொண்டிருந்தான். அவனைக் கார்டிலியாவின் குழுவினர் சிலர் கண்டுபிடித்தனர். அவனைப் பார்த்தற்கு கார்டிலியா பேரார்வத்தோடு இருந்தபோதிலும், சிறிது பொழுது கழித்து பார்க்கும்படி கேயசு கூறித்தடுத்து, கார்டிலியா அழைத்து வந்திருந்த திறமைமிக்க மருத்துவர்களைக் கொண்டு லீயருக்கு மருத்துவம் செய்து, அவனைச் சிறிது உறங்கச்செய்தான். செயல்திறமிக்க மருத்துவர்களின் உதவியினால், லீயர் ஓய்வு பெற்று, உடல்நலம் அடைந்து தன் மகளைக் காணும் நல்லநிலையை அடைந்தான். உதவிய மருத்துவர்களுக்குக் கார்டிலியா தனது தங்க அணிகலன்களை எல்லாம் அளித்தாள். இத்தகைய தந்தையும் மகளும் ஒருமுறை ஒருவர் கண்டகாட்சி எவ்வளவு மென்மையானது! பாசமும், பரிவும் மிக்க முதிய அரசனின் மனதில் தன் அன்புமகளைக் கண்டதனால் எழுந்த மகிழ்ச்சி ஒருபுறமும், ஒரு காலத்தில் தன்னால் தள்ளி ஒதுக்கப்பட்ட மகளிடமிருந்து கிடைத்த பாச உணர்வும் நோயுற்ற அவன் மனதில் போராடின. இதனால் அவனுடைய பாதிப் பித்துப் பிடித்த மனதிற்குத் தான் எங்கு இருக்கிறோம் என்பதை நினைத்துப் பார்க்கவோ, தன்னிடத்து முத்தமிட்டு மிகவும் அன்பாகப் பேசுவது யாரென்று தெரிந்துகொள்ளவோ இயலவில்லை. இவ்வாறு செய்யும் பெண் தன்மகள் கார்டிலியாதான் என்று தான் தவறாக எண்ணிவிட்டால் அதற்காகத் தன்னைப் பொறுத்துத் தன்னை ஏளனம் செய்யாதிருக்குமாறும் அருகிலிருப்போரைக் கேட்டுக்

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 341116